# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

SLM

9 – ம் வகுப்பு

நேரம் : 2.30 மணி

# காலாண்டுத் தேர்வு - 2019
## தமிழ் இரண்டாம் தாள்

மதிப்பெண்கள் : 100

### பகுதி - அ (இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி, கட்டுரை, கடிதம்)

**பலவுள் தெரிக.** 14 X 1 = 14

1. சொற்றொடர் அமைப்பதற்கு அடிப்படையாக இருக்கும் பெயர்ச் சொல்லை ...................... என்கிறோம்.
அ) பயனிலை ஆ) வினைமுற்று இ) எழுவாய் ஈ) எச்சம்
2. தன்வினை ......................
அ) நந்தினி வரைந்தாள் ஆ) மகனைப் படிக்க வைத்தார் இ) நேற்று வருவித்தான் ஈ) ஆசிரியர் கற்பித்தார்
3. சிந்தாமணி - என்பதன் இலக்கணக் குறிப்பு ......................
அ) பண்புத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) வினைத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. முன் + ஏறு = முன்னேறு ................. என்பது .................
அ) பெயர் + வினை = வினை ஆ) இடை + வினை = வினை இ) முற்று + வினை = வினை ஈ) வினை + வினை = வினை
5. எது சரி எனக் குறிப்பிடுக.
அ) தீப்பெட்டி
ஆ) ஓடாக்குதிரை
இ) இறந்தகாலம்
ஈ) தனி சிறப்பு
அ) அ, ஈ சரி ஆ) ஆ,ஈ சரி இ) அ,ஆ சரி ஈ) அனைத்தும் சரி
6. வல்லினம் மிகுந்து வருதல் ..................... அ) தோன்றல் விகாரம் ஆ) திரிதல் விகாரம் இ) கெடுதல் விகாரம்
7. வினைத்தொகையில் வல்லினம் மிகாது. சான்று ........................
அ) வந்த சிரிப்பு ஆ) அது செய் இ) இரவு பகல் ஈ) வளர்பிறை
8. பிரித்து எழுதுக. கண்டெடுக்கப்பட்டுள்ளன.
அ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன ஆ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன
9. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.
குமரன் அலுவலகத்திலிருந்து விரைவாக .................... அவன் மகள் பள்ளியிலிருந்து இன்னும் ........................
அ) வந்தான், வருவான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை இ) வந்தான் , வருகிறான் ஈ) வருவான் வரமாட்டான்
10. தவறான செய்தியைத் தரும் கூற்று ......................
அ) பட்டி மண்டபம் குறித்து மணிமேகலையில் உள்ளது ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்பது ஓர் இலக்கணநூல்
இ) எட்டு, பத்து .......... என்னும் எண்ணுப் பெயர்களில் வல்லினம் மிகாது
ஈ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.
11. தென்னிந்திய அடையாளச் சின்னமாக காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. - எவ்வகைத் தொடர்?
அ) செய்தித் தொடர் ஆ) கட்டளைத்தொடர் இ) வினாத்தொடர் ஈ) உணர்ச்சித் தொடர்
12. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - இவை உணர்த்தும் இலக்கணம்.
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
13. கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தருவது ........................
அ) துணை வினை ஆ) தனிவினை இ) முதல் வினை ஈ) பிறவினை
14. கிறு, தல் என்பன முறையே ...................... , .................. எனப்படும்.
அ) எதிர்கால இடைநிலை, பெயரெச்ச விகுதி ஆ) பகுதி, சாரியை
இ) நிகழ்கால இடைநிலை, தொழிற்பெயர் விகுதி ஈ) இறந்தகால இடைநிலை, வினையெச்ச விகுதி

### பகுதி - ஆ - பிரிவு - 1

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்க.** 5 X 2 = 10

15. கலைச் சொல் தருக. Comparative Grammar, Water management.
16. சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக. அ) மழை பெய்தது ஆ) படம் வரைந்தான்.
17. மரபு இணைச்சொற்களைத் தொடரில் அமைக்க. அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும்
18. பொருள் வேறுபடுத்திக் காட்டுக. அ) பரவை - பறவை ஆ) கரை - கறை
19. பழமொழிகளைக் கொண்டு சொற்றொடர் அமைக்க.
அ) நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல. ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
20. தொடரில் உள்ள எண்ணுப்பெயர்களை தமிழ் எண்களாக மாற்றுக.
அ) எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள். ஆ) வரும் பதினேழாம் தேதி ஆறுமணிக்கு நிகழ்ச்சிக்கு வரவும்.
21. அ) மங்கை சிறந்த பள்ளியில் படித்தார். - *(பிறவினையாக்குக.)*
ஆ) பதவியை விட்டு நீக்கினான். - *(தன்வினையாக்குக.)*

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி.** 5 X 2 = 10

22. கூட்டு வினையின் வகைகளை சான்றுடன் கூறுக.
23. வல்லினம் மிகும் இடங்கள் - இரண்டு சான்றுகள் தருக.
24. தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படும் துணைவினைகள் சிலவற்றைக் கூறுக.
25. செய்வினைத்தொடர் - செயப்பாட்டு வினைத்தொடர் வேறுபாடு எழுதுக.
26. பெயரடை என்றால் என்ன?
27. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
28. அலைந்தனன் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

பகுதி - இ  பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** 2 X 5 = 10

29. வள்ளுவர் வழிநின்று உவமை அணியைச் சான்றுடன் விவரி.

30. பயன்பாட்டுத் தொடர்கள் யாவை? அவற்றுள் இரண்டனை விளக்கவும்.

31. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

பிரிவு - 2

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க.** 4 X 5 = 20

32. **அட்டவணையை நிரப்புக.**

| பாடு | | | |
|---|---|---|---|
| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | | | |
| நீ | பாடினாய் | | |
| அவள் | | பாடுகிறாள் | |

33. **அடைப்புக்குள் உள்ள சொற்களை வினைமுற்றாக மாற்றி நிரப்புக.**
1) இந்திய மொழிகளின் வேராகத் தமிழ்மொழி ................. *(திகழ்)* 2) குழந்தைகள் அனைவரும் படம் ........ *(வரை)*
3) பூங்கொடி நாளை ஆசிரியர் பணியில் ..................... *(சேர்)* 4) உலகில் மூவாயிரம் மொழிகள் ............. *(பேசு)*
5) தவறுகளைத் ....................... *(திருத்து)*

34. பாராட்டு என்பது வாழ்வில் ஒரு வகையான ஊக்கம் ஆகும். ஆதலால் நீங்கள் பாராட்டு பெற்றதும், பிறரைப்பாராட்டியதும் என்ற மனநிலையினை ஐந்து கருத்துகளாக எழுதுக.

35. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



36. உனது பெற்றோர் மகிழும்படி நீ செய்ய வேண்டியன எவை என்பது குறித்து 5 கருத்துகளை கூறுக.

37. **பாடலின் இலக்கியநயத்தை உணர்ந்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.**

கல்லும் மலையும் குதித்துவந்தேன்- பெருங்
  காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
  இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
  ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
  ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். - கவிமணி

அ) பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்கள் இரண்டு எழுதுக. ஆ) இயைபு நயம் பயின்று வந்துள்ளதைக் காட்டுக.
இ) கவிமணி இப்பாடலில் கூறியுள்ள மையக்கருத்து யாது? ஈ) மோனைச் சொற்கள் இரண்டு எழுதுக.
உ) இப்பாடலுக்கேற்ற தலைப்பு ஒன்று தருக.

பிரிவு - 3

**எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்க.** 2 X 5 = 10

38. தண்ணீர் - இக்கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

39. **பின்வரும் அழைப்பிதழில் உள்ள நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை ஒன்று எழுதுக.**

**சுதந்திர தின விழா**
இடம் : பள்ளிக் கலையரங்கம்  நாள் 15.08.2019
கலையரங்கத்தில் ஆசிரியர், மாணவர் கூடுதல் - தமிழ்த்தாய் வாழ்த்து - கொடியேற்றம் - தலைமையாசிரியர் வரவேற்புரை - கலைநிகழ்ச்சிகள் - சிறப்பு விருந்தினரின் உரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - பரிசு வழங்குதல் - நன்றியுரை - நாட்டுப்பண்.

40. அகழாய்வு குறித்து செய்திகளை விவரிக்க.

பிரிவு - 4

**மொழிபெயர்க்க.** 2 X 5 = 10

அ) You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam.
ஆ) Just living is not enough ...... one must have Sunshine, freedom and a little flower - Christian Anderson.

42. உனது அன்றாட வாழ்வினில் பயன்டுத்துகின்ற பத்து ஆங்கிலச் சொற்களை எழுதி தமிழாக்கம் செய்க.

பகுதி - ஈ

**விரிவாக விடையளிக்க.** 2 X 8 = 16

43. உங்களின்நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய கால்முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்து கடிதம் ஒன்று எழுதுக. *(அல்லது)* உனது ஊரில்பரவிவரும் கொசுக்களை ஒழிக்க வேண்டியும், அதன் பாதிப்புகள் குறித்தும் நகராட்சி ஆணையருக்கு ஒரு கடிதம் எழுதுக.

44. பள்ளி நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / கவிதை ஏதேனும் ஒன்று குறித்து மதிப்புரை எழுதுக.
குறிப்பு : நூலின் தலைப்பு - மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படும் கருத்து - நூலின் நயங்கள் - சிறப்புகள் - நூல்குறித்து உங்களின் பொதுவான கருத்து - முடிவுரை. *(அல்லது)*
பொதுக்கட்டுரை : முன்னுரை - விண்வெளி - விண்வெளித்துறையில் இந்தியரின் பங்கு சந்திராயன் - I - சந்திராயன் - II - இலக்குகள் - முடிவுரை.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மேனம்பாரித் அரசுக் மேல்நிலைப்பள்ளி,
எம்.தாளிப்பாடி. செச்சேரி.
காலாண்டுத் தேர்வு - 2019
தமிழ் இரண்டாம் தாள்.

9-ஆம் வகுப்பு
மதிப்பெண்கள் 100 நேரம் : 2.30 மணி

## பகுதி - அ.

பலவுள் தெரிக. 14×1 = 14

1. இ) எருவாய்
2. அ) நந்தினி வரைந்தாள்
3. ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. ஆ) இவை + இனை
5. இ) அ, ஆ சரி
6. அ) தோன்றல் விகாரம்

~~7. ஆ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன. (ஆ)~~

7. ஈ) உவர்ப்பிறை
8. ஆ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன.
9. ஆ) வந்துவிட்டான், வரவில்லை.
10. இ) பெரு, பத்து எண்ணிய எண்ணுப் பெயர்களில் வல்லினம் மிகாது.
11. அ) செய்தித்தொடர்
12. ஈ) தொகைச் சொற்கள்
13. இ) துணைவினை
14. இ) நிகழ்கால இடைநிலை, தொழிற்பெயர் விகுதி

## பகுதி - ஆ பிரிவு - 1

15. கலைச்சொல் 5×2 = 10
    1. ஒப்பிலக்கணம்
    2. நீர்மேலாண்மை

TNPL

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

16. அ) மழைபெய்தது
நேற்று மழைபெய்தது
நேற்று இரவு மழைபெய்தது
நேற்று இரவு கனமழைபெய்தது.

ஆ) படம்வரைந்தான்
அவன் தாளில் படம் வரைந்தான்
அவன் தாளில் அழகிய படம்வரைந்தான்
அவன் தாளில் அழகிய வண்ணத்தில் படம் வரைந்தா

17. அ) நகமும் சதையும்
அ) என் உயிர்த்தோழனும் நானும் என்றென்றும் நகமும் சதையும் போல நட்புடன் பழகுவோம்.

ஆ) இராமன் தன் தாயைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்து வளர்த்தான்.

18. பொருள் வேறுபாடு
அ) பரவை - கடல்
பறவை - பட்சி

ஆ) கரை - எல்லை
கறை - வாழைக்கறை (களங்கம்)

19. சொற்றொடர் அமைத்தல்
அ) அன்னதானம் போடும் இடத்தில் காகம், நாய்க்கு உணவு கிடைத்தது நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல இருந்தது.

ஆ) ராமன் செய்த தவறானது அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போல வெளிப்பட்டது.

Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com



20. எண்ணுப்பெயர்கள்

அ) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு - அ, க0

ஆ) பதினேழாம், அறுமணிக்கு - கஎ, சா

21. பிறவினை

அ) மங்கை சிறந்த பள்ளியில் படிக்க வைக்கப்பட்டார்.

ஆ) பதவியை விட்டு நீங்கினான் (தன்வினை)

பிரிவு - 2

22. கூட்டுவினை 5×2 = 10

கூட்டுவினைகள் மூன்று வகைப்படும்.

அவை: சான்று

1. பெயர் + வினை = வினை → தந்தி + அடி = தந்தியடி
2. வினை + வினை = வினை → கண்டு + பிடி = கண்டுபிடி
3. இடை + வினை = வினை → முன் + ஏறு = முன்னேறு

23. வல்லினம் மிகும் இடங்கள் - இரண்டு சான்று

* திசைப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்
  கிழக்குப்பகுதி
* உவமைத் தொகையில் வல்லினம் மிகும்,
  தாமரைப்பாதம்.

24. தற்கால துணைவினைகள்

அருள், அயிற்று, இடு, இரு, காட்டு, கூடும், கூடாது, கொண்டிரு, கொடு, கொள், செய், தா, தொலை, படு, பார், பொறு, போ, வை, வா வந்து — ஏதேனும் ஐந்தினை எழுதினால் மதிப்பெண் வழங்கவும்.

Padasalai

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

25. செய்வினை

செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை செய்வினை.

செயப்பாட்டுவினை

செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்பாட்டுவினை.

26. பெயரடை

எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருவது பெயரடை ஆகும்.

சான்று:

நல்லவனாய் வெற்றி படித்தேன்.

27. பகுபத உறுப்புகள்

பகுபத உறுப்புகள் ஆறுவகைப்படும்.

அவை 1. பகுதி 2. விகுதி 3. இடைநிலை

4. சந்தி 5. சாரியை 6. விகாரம்

28. அறைந்தனன் – பகுபத உறுப்பிலக்கணம்.

அறை + த்(ந்) + த் + அன் + அன்

அறை – பகுதி

த்(ந்) – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

பகுதி – இ

29. உவமை அணி. 2 × 5 = 10

அணி விளக்கம்: உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமைந்து, போல, போன்ற உவம உருபு பெற்று வருவது உவமை அணி ஆகும்.

சான்று:

30. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

விளக்கம்:

தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்பவரைப் பொறுப்பது தலைசிறந்தது.

30. பயன்பாட்டுத் தொடர்கள் ? விளக்கம்.

தன்வினைத்தொடர், பிறவினைத்தொடர், செய்வினைத்தொடர், செயப்பாட்டுவினைத்தொடர், உடன்பாட்டுவினைத்தொடர், எதிர்மறைத்தொடர் செய்தித்தொடர், உணர்ச்சித்தொடர், வினாத்தொடர் கட்டளைத்தொடர்.

தன்வினை

எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும். சான்று: அவன் திருந்தினான்.

பிறவினை

எழுவாய் ஒரு வினையைச் செய்யவைத்தால் அது பிறவினை எனப்படும்.

சான்று: அவனை திருந்த வைத்தான்.

31. சொற்பொருள் பின்வருநிலையணி

அணி விளக்கம்.

செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலமுறை வருமாறு கூறுவது சொற்பொருள் பின்வருநிலையணியாம்.

சான்று

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

விளக்கம்

இக்குறட்பாவில் 'நாடி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'தெரிந்து கொள்ளுதல்' என்னும் பொருளைத் தருவதால் இக்குறட்பாவில் சொற்பொருள் பின்வருநிலை அணி பயின்று வந்துள்ளது.

32. அட்டவணையை நிரப்புக. 4X5 = 20

பாடு

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நான் | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| நீ | பாடினாய் | பாடுகிறாய் | பாடுவாய் |
| அவன் | பாடினான் | பாடுகிறான் | பாடுவான். |

33. வினைமுற்றாக நிரப்புதல்

1. நிகழ்கிறது
2. வரைந்தனர்
3. சேர்ந்தான்
4. பேசப்படுகின்றன.
5. திருத்திக்கொள்வோம்.

34. பாராட்டு (ஏதேனும் ஒன்றுக்கு மதிப்பெண் வழங்கவும்)

அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்தபோது.

ஆ) கட்டுரை ஏடுகளைத் தேடி தவறவிட்ட என் ஆசிரியருக்கு அதை எடுத்துத் தந்த போது.

இ) வயதான தாத்தாவிற்குப் பேருந்தில் அமர இடம் கொடுத்த பொழுது.

ஈ) துணிப்பையைக் கொடுத்துப் பொருட்களைக் கடைக்காரரிடம் கேட்ட பொழுது.

உ) அப்பா, அம்மாவிற்கு உதவி செய்த பொழுது.

Padasalai

35. காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல்.

"நாளைய மனிதன், பிறந்துள்ளான்
மனிதனை ரோபோ பிறந்துள்ளது
மனிதன் படைத்த ரோபோ
நாளைய நவீனயுகத்தில் முக்கியப்
பங்கு வகிக்கும்.....
நாளைய வளர்ச்சி ?

36. மூத்தோர் மகிழும்படி செய்ய வேண்டியவை
(சொந்த நடை கருத்துக்களுக்கு மதிப்பெண் வழங்கவும்)

1. எடுத்த பொருள்களை மீண்டும் அந்த இடத்திலேயே பாதுகாப்பாக வைப்பது.
2. மின்சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது.
3. திறன்பேசியை பயன்படுத்தாமல் இருப்பது.
4. என் வீட்டின் நிலையறிந்து, தேவையறிந்து பொருள்கள் வாங்குவது.
5. அவர்களுக்கு சிறுசிறு உதவிகள் செய்வது.

37. இலக்கிய நயம்.

அ) எதுகைச் சொற்கள்

கல்லும் ஏறாத காடும்
எல்லை ஊறாத மேடுகள்

ஆ) இயைபுநயம்

வந்தேன், வந்தேன் என மீண்டும் மீண்டும் இயைபுச் சொல்லாக பயின்று வந்துள்ளது.

இ) மையக்கருத்து

இயற்கை காட்சிகளின் அழகினை காட்சிப்படுத்தி அழகுபட கூறியுள்ளார்.

ஈ) மோனைச் சொற்கள்

கல்லும் ஊறாத ஆழி
காடும் ஊரி ஆடை

உ) தலைப்பு - அருவி

## பிரிவு-3

2×5 = 10

38. தண்ணீர்

* முன்னுரை
* இந்திராவின் வீடு
* ரயில் வந்தது
* தண்ணீர் பஞ்சம்
* காணாமல் போன இந்திரா
* முடிவுரை

39. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை

* சுதந்திர திருவிழா
* இடம், நாள்
* தமிழ்த்தாய் வாழ்த்து
* கொடியேற்றம்
* வரவேற்புரை
* கலைநிகழ்ச்சிகள்
* சிறப்பு விருந்தினர் உரை
* வாழ்த்துரை
* பரிசு வழங்குதல்
* நன்றியுரை
* நாட்டுப்பண்

40. அகழாய்வு குறித்த செய்திகள்

* அகழாய்வின் தேவை
* இயற்கையோடு இணைந்த வாழ்வு
* கீழடியில் கிடைத்த பொருள்களின் பட்டியல்
* காலக்கட்டம்
* உலகிய [illegible] நாகரிகம்.

Padasalai

## பிரிவு - 4

41. மொழிபெயர்க்க 2×5 = 10

அ) உன் கனவு மெய்ப்பட கனவு காணவேண்டும். - ஏ.பி.ஜே. அப்துல்கலாம்.

ஆ) வாழ்வது மட்டுமே போதுமானதல்ல. அதில் சூரியஉதயம் சுதந்திரம், மற்றும் சிறு பூக்களும் இருக்க வேண்டும். - கிறிஸ்டியன் ஆண்டர்சன்.

42. அன்றாட வாழ்வினில் பயன்படுத்தும் ஆங்கிலச்சொல்லுக்கான தமிழ்ச்சொல்.

1. Good morning - காலைவணக்கம்
2. Thank you - நன்றி
3. Doubt - சந்தேகம் / ஐயம்
4. Chalkpiece - சுண்ணக்கட்டி
5. Water Bottle - தண்ணீர் குடுவை.
6. School Bus - பள்ளிப்பேருந்து
7. Distance - தூரம்
8. Bakery - அடு அடுமனை
9. Watch - கைக்கடிகாரம்
10. Cellphone - அலைபேசி

## பகுதி - ஈ. 2×8 = 16

விரிவான விடையளி.

43. பிறந்தநாள் பரிசாக அனுப்பிய காலணியைத் தந்த சித்தப்பன் நன்றி கடிதம்.

* நாள்
* இடம்
* நலம் விசாரித்தல்
* உடல் செய்தி
* அன்புடன்
* உறைமேல்முகவரி

(அல்லது)

கொசுக்களை அழிக்க வேண்டி நகராட்சி ஆணையருக்கு கடிதம்

* அனுப்புநர்
* பெறுநர்
* பொருள்
* உள்ளசெய்தி
* நன்றி
* இடம், நாள்
* உறைமேல் முகவரி

44. கதை / கட்டுரை / கவிதை குறித்து மதிப்புரை

* நூலின் தலைப்பு
* மையப்பொருள்
* மொழிநடை
* வெளிப்படும் கருத்து
* சிறப்புகள்
* பொதிவான கருத்து
* முடிவுரை

சொந்த நடையில் எழுதி இருந்தால் மதிப்பெண் வழங்கவும் முழுமையாக (4)

(அல்லது)

~~45.~~ பொதுக்கட்டுரை

* முன்னுரை
* விண்வெளித்துறையில் இந்தியாவின் பங்கு
* சந்திராயன் 1 & 2 இலக்குகள்
* முடிவுரை

விடை தயாரிப்பு,

அ. ரூபி MA., M.Ed.,
முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்,
மீனாம்பாள் மெட்ரிக் பள்ளி,
மேச்சேரி.